காஞ்சி

நாடு

17 டிச 1993
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை - 600 008.

பேறிஞர் அண்ணா இல்லத்திருமண விழா

இளவரசி - முத்துக்குமார்

JL
N2112, N92KW
N93.1.15
217215
ACL-TNAL 03379
8378

சிறப்பாசிரியர்:
டாக்டர். சி.என்.ஏ. பரிமளம்.

அண்ணா பற்றாளர்களுக்கு வேண்டுகோள்.

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள்

தொகுப்பு - திட்டம்

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள், கதைகள், கட்டுரைகள், நாடகங்கள், தம்பிக்கு கடிதங்கள், மிக சிறந்த முறையில் என்றென்றும் போற்றி பாதுகாக்கின்றன வகையில் 700 பக்சங்களுக்கு குறையாமல் நல்ல தரமான தாளில், வண்ண அட்டையுடன் வெளிவர இருக்கிறது. முதல் தொகுப்பு விரைவில் வெளிவருகிறது. ஒரு தொகுப்பின் விலை ரூ. 150/- பதினைந்து தொகுப்புகள் வர இருக்கின்றன. ஒரு திங்களுக்கு ஒரு தொகுப்பு என்கிற வகையில்! ரூ 150/- முன்பணம் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும், 1000 புத்தகங்கள் மட்டும் வெளியிட திட்டமிடுள்ளோம். ஆகையால் விரைவில் உங்கள் பெயரை பதிவுசெய்து கொள்ளவும்.

பின்குறிப்பு: காசோலை பணவிடை அனுப்பவேண்டிய முகவரி,

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை,

7, அவின்யூ சாலை,

சென்னை-600 034.

தமிழ் நாடு,

தென் இந்தியா.

விளம்பரக் கட்டணம் — காஞ்சிநாடு

அரைப்பக்கம்-ரூ 250 அட்டை (உள்ளே) 750 முழுப்பக்கம் ரூ 500, அட்டை (வெளியே) 1000.

காஞ்சி நாடு: உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?

உங்கள் உறுப்பினர் கட்டணத்தை புதுப்பித்து விட்டீர்களா?

காஞ்சி நாடு

மலர்—1 7—12—1993 இதழ்—15

திருவள்ளுவர் ஆண்டு 2024 நளி(கார்த்திகை)

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் திங்கள் இதழ்

முத்தமிழ்க் காவலர் வாழ்க!

தமிழினத்தும், தமிழ்மொழிக்கும் ஊறு நேருகிறபோது குரல் கொடுத்து முன்னணியில் நின்று போராடும் இளைஞர்! தள்ளாத வயதிலும், போராட்டத்தை தள்ளாத மனது.

இந்த வயதிலும் நாடு கடந்து சென்று தமிழ் மொழிக்காக, குரல் கொடுக்கும் எஃகு மனம். உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்கிற கொள்கை உரத்துடன்பணயாற்றிவரும் முத்தமிழ்க் காவலர் அவர்கள்95ம் அகவையில் காலடி வைக்கும் இந்த நேரத்தில் அவர்கள் வாழ்க! வாழ்க என வாழ்த்தி மகிழ்கிறோம்.

தமிழினக் காவலர் வாழ்க!

தந்தை பெரியார் அவர்களின் சமூக நீதி கொள்கையினை இந்தியாவின் பிற மாநிலங்களிலும் பரவிடச்செய்து — மண்டல்குழு பரிந்துரையினை ஏற்று மைய அரசு ஆணையிடவும் இரவுபகல் பாராது சமூகநீதிக்கொடி ஏந்தி கடுமையாக உழைக்கும் சமூகநீதி காவலர். திராவிடர் கழகம் பொதுச் செயலாளர் அறுபதாம் ஆண்டு மணிவிழா காணும் இந்நாளில் தாங்கள் பல்லாண்டு வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறோம். ஆடம்பரமாக பிறந்தநாள் விழா கொண்டாடாமல் தனித்தன்மையுடன் வாழ்கிற ஆசிரியர் கி. வீரமணி அவர்களே வாழ்க! வாழ்க!!

மனித மேம்பாடே என் இயக்கம்!

தோழமையே என் மேடை!!

—பேரறிஞர் அண்ணா

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை
துணிவு தெளிவு கனிவு

செய்திகள்

17. 10. 93 அன்று ஞாயிறு மாலை 4. 00 மணியளவில் காமராஜர் மாவட்டம் காரியாபட்யில், மாவட்ட பேரறிஞர் அண்ணா இலக்கிய பேரவையின் கலந்துரையாடல் கூட்டம் பேரவை அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் திரு A போஸ் B.SC அவர்கள் தலைமை ஏற்றார். திரு த. தமிழ் ,வாணன் D.C,E (Prop Kavviji Vauan Indestres) முன்னிலை வகித்தார். திரு, R. அருண் B. SC. அவர்கள் வரவேற்புரையாற்றினார் பேரவை உறுப்பினர்கள் திரு, இருளன், போவாஸ் மற்றும் காரியாபட்டி தி.மு.க. தோழர்கள், தி,க தோழர்களும், அண்ணாவின் பற்றாளர்கள் பெரும் அளவில் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.

கூட்டத்தில் காஞ்சி நாடு இதழுக்கு வரும் ஜனவரியில் மாதத்தில் இருந்து வாழ்நாள் சந்தா கட்டுவது, மற்றும் காஞ்சிநாடு இதழ் வளர்ச்சிக்கு பெரும் உதவி செய்வது என தீர்மானங்கள் நிறை வேற்றபட்டது. ஜனவரியில் வாழ்நாள் சந்தா கட்டும் உறுப்பினர்கள் விபரம்.

1. V. இராஜசேகரன். காரியாபட்டி.
2. V. பிரகாஷ் காரியாபட்டி
3. A. போஸ் B. SC காரியாபட்டி (கோவை)
4. T. தமிழ்வாணன் காரியாபட்டி

திருநெல்வேலி

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்த நாளைக் கொண்டாடுமுகத்தான், பேரறிஞர் அண்ணா இலக்கிய பேரவையின் திருநெல்வேலி மாவட்டக் கிளையின் சார்பில் ஒரு கூட்டம்

217215

26.9.93 ஞாயிற்றுக்கிழமை மாலையில் திருநெல்வேலிச் சந்திப்பு சீதாபதி விடுதி அரங்கில் நடைபெற்றது. பேரவையின் தலைவர் மு. வயலூர் குமரன் தலைமை தாங்கினார். செயலாளர் வேல்முருகன் வரவேற்புரையாற்றினார். நெடுஞ்சேரலாதன், குமார.சுப்ரமணியன், நாஞ்சில் மணி ஆகியோர், பெரியாரும் அண்ணாவும் தமிழ்ச்சமுதாயத் ஆற்றிய தொண்டினைப் பற்றி உரையாற்றினார்கள். இறுதியாகப் புலவர் அறிவுடை நம்பி பெரியார், அண்ணா ஆகியோரின் சிறப்பியல் புகள் பற்றியும், தமிழுக்கும், தமிழினத்திற்கும் அவர்கள் ஆற்றிய அரும் பணிகள் பற்றியும் சிறப்புரையாற்றினார். பொன். பசுங்கிளி நன்றி கூறினார். கூட்டத்தில் அண்ணா பற்றாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்களிடம், அண்ணாவின் நூல்களின் தொகுப்புக்கும், 'காஞ்சி நாடு' இதழுக்கும் பணம் அனுப்பிவைக்கும், படி தெரிந்தவர்களிடம் எடுத்துக்கூறி அவர்களும் பணம் அனுப்பு மாறு ஏற்பாடு செய்யவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

காஞ்சித் தங்கம்

நல்லவர் உள்ளமெல்லாம்
நடுங்கித் துடித்து சோர்ந்து
சொல்லொணா கொடுமையாகும்
துயர்கடல் சூழ்ந்து மாழ்மப்
பல்லவ நாட்டுச் சிங்கம்
பண்பை காத்து காஞ்சித்தங்கம்
தமிழக மக்களை விட்டுப் பிரிந்தார்
ஒவெனக் கதறுகின்றோம்!
அமிழ்தெனும் தமிழின் சீர்மை
அரிய தம்பேச்சில், எழுத்தில் தம்மை
அறிந்திடச் செய்த அண்ணா
கலங்கி யாம் வருந்தி யோங்க
கடலோரத்திற் சந்தனப் பெட்டகத்தில்
துயில் கொண்டார் தல்ல
தமிழ் சொற்களை சுவைக்க
நாளும் தருபவர் யாரோ அம்மா!

—சி. என். ஏ. பாபு

JL
on2112, N92ICN

தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள்!

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய நமது முன்னோர்கள் கண்ட மொழி நம் தாய்மொழி.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த மொழி. முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களும் வளர்த்த மொழி நம் தமிழ்மொழி. இது இன்று அழிந்துகொண்டு வருகிறது.

பயிற்றுமொழி தமிழாக இல்லை; ஆட்சிமொழி தமிழாக இல்லை; திருக்கோயில்களில் தமிழ் இல்லை; நீதிமன்றங்களில் தமிழ் இல்லை; இசையரங்குகளில் தமிழ் இல்லை; மழலையர் பள்ளிகளில் தமிழ் இல்லை; மனைப் பெயர்களில் தமிழ் இல்லை; கடைப் பலகைகளில் தமிழ் இல்லை; நம் மக்களுக்கு வைக்கும் பெயர்களும் தமிழாக இல்லை. தமிழன் தமிழனோடு பேசும்போதுகூட தமிழில் பேசுவதில்லை; தமிழன் தமிழனுக்கு எழுதும் கடிதங்களைக்கூட தமிழில் எழுதுவதில்லை; தமிழ் மக்கள் கையெழுத்தினையும் தமிழில் போடுவதில்லை. தமிழில் கையெழுத்திடுபவர்கள்கூட தலைப்பெழுத்தைத் தமிழில் போடுவதில்லை.

புலவர் பெருமக்களுக்கும் பொதுமக்களும் சிறிதும் தொடர்பில்லை. இதனால் கலப்படத் தமிழ்க்காரர்களும் திரைப்படத் தமிழ்க்காரர்களும் பொது மக்களோடு தொடர்புகொண்டுவரும் நிலை ஏற்பட்டு, பொதுமக்கள் பேசுகின்ற மொழிகூட தமிழாக இல்லை.

'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்ற நிலை மாறி, 'எங்கே தமிழ்? எதிலே தமிழ்? என்ற நிலை வந்துவிட்டது.

''தமிழ் எங்கள் உயிர்'' என்று போற்றி வளர்த்த புலவர் பெருமக்களெல்லாம் மறைய மறைய தமிழும் மறைந்துகொண்டே வருகிறது. இறுதியாக நம்முடைய காலத்திலே நம் கண்முன்னே நம்முடைய மொழி அழிக்கப்பட்டு வருகிறது

தமிழ்மொழியை நம்மால் வளர்க்க முடியாவிட்டாலும், அது அழிவதையாயினும் தடுக்க வேண்டும் என்று புலவர் பெருமக்களில் சிலரும் பேராசிரியர்களில் சிலரும் தமிழறிஞர்கள் சிலரும் சிலபல இடங்களில் கூடிபேசி மாநாடுகளை நடத்தி முடிவுகளை அரசுக்கு அறிவித்து. ''உண்ணாவிரதமிருந்து'', வழிநடைப் பயணத்தையும் நடத்தி, மறியல் போராட்டத்தையும் நடத்திச் சிறைபுகும் வரை நடந்தேறியாயிற்று. அரசாங்கம் அன்றே அவர்களை விடுதலை செய்துவிட்டு அமைதியடைந்துவிட்டது. பலன் ஒன்றுமில்லை.

அரசின் பிற துறைகளில் செலுத்தும் கவனத்தில் நூற்றில் ஒரு பங்கினைக்கூட தமிழ்த்துறையில் செலுத்துவதில்லை. இதனால் ஆட்சியினர்க்குத் தமிழுணர்வு சிறிதுகூட இல்லையோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

இதற்கு என்ன செயலாம்?

ஆகவே தமிழ்ப்பெருமக்கள் ஒவ்வொருவரும் இதற்கு என்னென்ன செயலாம்? எதையெதைச் செய்தாக வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? என்பனவற்றை சுருக்கமாக எழுதுவதோடு. ''தன்னால் என்ன செய்ய முடியும்?'' என்பதையும் எழுதி, உடனே அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

திருச்சிராப்பள்ளி
620 008.
14—10—1993

தங்கள் அன்புள்ள

கி. ஆ. பெ. விசுவநாதம்

நிறுவனர், ''தமிழமப் புலவர் குழு''

அறிஞர் அண்ணாவின் தன் வரலாறு (16)

— Dr. சி. என். ஏ. பரிமளம் —

நான் மிகவும் சோபேறி, பெரியாரைப் போல் உழைக்க முடியாது என்று கூறினார்கள். நான் ஒப்புக் கொள்ளுகிறேன், பெரியார் போல் உழைக்க முடியாது என்று, ஏன்? அவருக்கு உழைக்கும் சக்தி போது மான வசதி இருக்கிறது அவ்வளவு வசதியும் சக்தியும் பெற்றவனல்ல நான் என்பது மட்டுமல்ல, பெரியாரைப் போல் உழைப்பது தவறு" கூடாது- தேவையற்றது என்ற கருத்துடையவன் நான் அது ஜனநாய கத்திற்கு ஏற்ற தல்ல முரண்பட்டது என்ற கருத்து கொண்டவன். ஒரே மனிதர், தானே, எல்லா பொறுப்புகளையிம் வகிப்பது தவறு, பிறர்க்கு சந்தர்ப்பம், வசதி அளிக்க வேண்டியது கடமை என்ற போக்கை கொண்டவன். சோம்பேறி என்று கூறுவது எனக்கு பொருந் துமா என்று பார். திராவிடநாடு பத்திரிக்கை நடத்தி வருகிறேன். இந்தப் பத்திரிக்கையில் ஒர்சு பக்கங்களைத் தவிர மற்றவை யவேம் என்னால் எழுதப்படுபவை,

18. 9. 49

திமுக. தொடக்கவிழா

✠ ✠ ✠

......நான் என்ன எழுதினேன் ஆரிய மானயயில், பார்பனீயம் பேராசைக் கொண்டது என்று குறிப்பிட்டுருக்கிறேன், ஆனால் அதை விட மோசமாக பாரதியார் கூறியிருக்கிறார்.

பேராசைக் காரனடா பார்ப்பான்
பெரியதுரை யென்னிலுடல் வேர்ப்பான்.

இப்படி சொல்கிறார். தேசிய கவி பாரதியார், அவருக்கு மண்டபம் கட்டுகிறார்கள். ஏன் அவரை குற்றம் சாட்டக் கூடாது? நான் என்ன அரைவிட அதிசமாகவா எழுதி விட்டேன் தைரியம், திறமை, அறி விலே நம்பிக்கையிருக்குமானால் நான் ஆரிய மாயை என்று தீட்டினால் ஆரிய மகிமை என்று தீட்டுவது தானே கல்கியாரில்லையா, விகடரை விரும்பி அழைத்தால் வரமாட்டரா, தினமணி ஆசிரியர் முடியாதென்பாரா, மித்திரன் ஆசிரியர் வரமாட்டேன் ... என்று கூறுவாரா?

நான் தான் என்ன புத்தர் போல போதிமரத்தடியில் ஞானோதயம் பெற்றவனா? ஆண்டவன் அர்த்தராத்திரியில் வந்து அருள் கூர்ந்த

தால் எழுதக் கற்றுக் கொண்டவனா? ஆலவாயப்பர் வந்து எனக்கு அருள் கூர்ந்ததால் ஆரியமாயை தீட்டினேனா. அல்லது ஞானசம்பந்த னுக்கு அம்மையினால் ஞானப்பால் கிடைத்ததே - அதுபோல பெற்று இந்த நூல் எழுதினேனா? இல்லையே - அப்படியிருக்கும் போது ஏன் இவர்கள், நான் எழுதினால் மறுப்பேடு தீட்டக் கூடாது? வக்கில்லையா, வழியில்லையா?

8-10-1050

நுங்கம்பாக்கம் பொதுக்கூட்டம்

✠ ✠ ✠

இதயபூர்வமான (இதய நிறைவான) தலைவர்! இதயத்திலே குடியேறிய தலைவர்!

நமக்கெல்லாம் வழிகாட்டிய பெரியார்!

அவர் அமர்ந்த பீடத்தை—தலைவர் பதவியை—நாற்காலியைக் காலியாகவே வைத்திருக்கிறோம்.

அந்தப்பீடத்திலே — நாற்காலியிலே வேறு ஆட்களை அமர்த்தவோ, அல்லது நாங்களோ அல்லது நானோ அமரவோ விரும்பவில்லை. [1949 செப்டம்பர் 17, சென்னை இராபின்சன் பூங்காவில் நடைபெற்ற தி.மு.க. தொடக்க வுழா பேச்சு]

நான் தம்பி பதில் கூறி காலத்தை வீணாக்கிச் கொள்வதில்லையே!

தம்பிக்கு 7.4.51

✠ ✠ ✠

பொறுப்புகளை ஏற்கத்தயங்குவது என் சுபாவம்,

ஆனால் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளை என்னால் முடிந்தவரை சுமந்து செல்வது என்பழக்கம்.

மேடைப்பேச்சு

கப்பல் மூழ்குவதாக இருந்தாலும் கப்பலோட்டி கப்பலோடு மூழ்குவானே தவிர இப்படியும் அப்படியும் போக நினைக்மாட்டான். அதைப்போல் என் வாழ்க்கையின் இறுதி நாள் வரை நான் கொண்டுள்ள இலட்சியத்திலிருந்து இம்மியளவும் பிறழ மாட்டேன் இது உறுதி.

மேடைப்பேச்சு

.......எனவேதான் பொது அறிவு எல்லோருக்கும் கிடைக்கும்படியான பெரும்பணியை செய்துவருகிறோம். கட்டிடமில்லா கல்லூரிகள் நாங்கள்.

மேடைப்பேச்சு 28 3,51.

நான் கனதனவான்கள் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல- பணத்தால் உயர்ந்தவனல்ல - உங்களை விட செல்வத்தில் குறைந்தவன் - திறமையில் குறைந்தவன். இவைகளையெல்லாம் விட தைரியத்தில் மிக மிகக்குறைந்தவன் - ஆனால் என்னை சூழ்ந்திருக்கும் தம்பிமார்களின் தைரியத்தை நம்பிதான் பணியாற்றுகிறேன். நாம் இலட்சிய பயணத்தில் வெற்றி பெற்றே தீருவோம் இது உறுதி.

சென்னை - முதல் தி. மு. க. மாநில மாநாட்டு உரை
16-12-1951

✠ ✠ ✠

சிறைவாசம் என் பொது வாழ்க்கையிலே, இது முதல் முறையல்ல, ஆச்சாரியார் ஆட்சி காலத்திலே, இந்தி எதிர்ப்பு நடைபெற்ற போது சென்னை சிறையில் இருந்திருக்கிறேன். - நான்கு மாதங்கள். சைதாபேட்டை சப்ஜெயிலில் இருந்திருக்கிறேன் - ஒருவாரம். கவர்னர் ஜெனலாக ஆச்சாரியார் வந்த போதும் சிலநாட்கள் இருந்திருக்கிறேன். பலமுறை சிறை சென்று மனமெருகேறிய பெரியாருடன் பழகி இருக்கிறேன். எனவே சிறை என்னை சிதைத்து விடாது! நான் தம்பி! திராவிடர் கழகமாக நாம் இருந்த போது பொதுச் செயலாளன் தான்.

25 - 9 - 55

✠ ✠ ✠

கல்லக்குடி வழங்கப்பட்டுவிட்டது. அறப்போர் வென்றது. என் வாழ்த்தும் வணக்கமும் தொடர்பு கொண்ட அனைவருக்கும். கல்லக்குடி வழங்கிய மத்திய சர்க்கார் இரயில்வே அமைச்சருக்கும், மாநிலத்தின் மனப்போக்கை எடுத்துக்காட்டி இந்த நீதி கிடைக்கச் செய்த சென்னை சர்க்காருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லக்குடி வழங்கப்பட்டிருப்பது, காமராசர் சர்க்கார் மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கும் மாண்பு கொண்டது என்பதற்கு மற்றோரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. மகிழ்கிறேன். கல்லக்குடி கிடைக்கத் தொண்டாற்றிய அனைவருக்கும், துணைநின்ற பல்லோருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

கல்லக்குடி கோரி நடத்தப்பட்ட கிளர்ச்சியின் போது உயிரிழந்த வீரத்தியாகிகளை எண்ணி உருகாமலிருக்க யாரால் இயலும்? அவர்களின் வீரத்தியாகம் வீண்போகவில்லை என்பது கண்டு நமது மனமெலாம் எழுச்சி மயமாகிறது.

கல்லக்குடி காண அரும்பாடுபட்டு உயிர்நீத்த தோழர்களின் குடும்பத்தாருக்கு நினைவு காணிக்கை செலுத்த வேண்டியது தி. க. கழகத்தின் கடமை ஏன் அறம் அறிந்த அனைவருக்கும் கடமை உண்டு.

கல்லக்குடி வெற்றி கண்ட தோழர்கள் இனி அந்த 'காணிக்கை' உருவாகச் செய்யும் பணியினை அடுத்த கட்டமாக கொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்
அண்ணாதுரை.
தி. கா. 31 - 10 - 1954

தமிழ் எப்படி எப்படி பேசுவதற்குரியது, இலக்கியம் பேச்சுடன் கலந்து வரும்போது எத்தகைய இன்பமளிக்கும் என்றெல்லாம் நான் பலமுறை எண்ணிப் பார்த்ததுண்டு — மனதிலே உருவெடுத்துக் கொண்டிருந்த ஆசை நடமாடக்கண்டேன், தோழர் நெடுஞ்செழியன், கழக மேடையில் பேசத்தொடங்கியதும்.

கருவூர் ஆற்று மணலில்—நினைவிருக்கிறது—பெரியாரும் இருந்தார்—தோழர் நெடுஞ்செழியன் இலக்கியத்தை இனிய முறையிலே எடுத்தளித்தார். நல்ல விருந்து — ஆயினும் என்ன செய்வது? நாளாவட்டத்தில், தரத்தைச் சிறிதளவு தளர்த்தச் சொல்லி வற்புறுத்த வேண்டித்தான் வந்தது. தரத்தை வளரச்செய்யும் போக்கிலா ஆளவந்தார்கள் நம்மை விட்டு வைக்கிறார்கள்!!

நடை இருக்கட்டும், நன்பரின் திறம் இருக்கிறதே, அது கண்டு நான் வியப்புற்றேன்.

என்னிடம் இல்லாத — நான் விரும்பாததால் அல்ல, இயலாததால்—ஒரு அருங்குணம் அவரிடம் உண்டு—கண்டிருப்பீர்கள், ஓயாது உழைப்பது! எப்போதும் எங்கேயும் எதையாவது, எப்படியாவது செய்து கெண்டே இருப்பது. என்னாலே இதைக்கண்டு இரசிக்க முடியும்:—ஆனால் என்னை அந்நிலைக்கு மாற்றிக் கொள்ள இயலவில்லை. நான் அடிக்கடி கனவுகாண்கிறேன், சோலையில் சொகுசாக உலவுவதுபோல அல்ல—அந்தக் காலம் மலை ஏறி விட்டது—பொதுப் பிரச்சனைகளைப்பற்றி, தோழர் நெடுஞ்செழியன் எப்போதும் காரியமாற்றியக் கொண்டே இருக்கும் இயல்பினர். நேரம் வீணாகி விட்டது என்று கூறத்தக்கப்போக்கிலே, அவர் இருந்ததை நான் கண்டதே இல்லை. இந்த இயல்பு, கழகத்துக்குப் பெருந்துணையளிக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை. வீட்டிலே என் குறும்புப் பார்வை

யைக் கண்டு தளருவார், எனினும் இயல்பு அவரை விடாது, மறு கணம், ஏதாவது வேலையைத் துவக்கிக் கொள்வார்.

சிறையில் மூன்று திங்கள் இருவரும் ஒரே அறையில் தங்கி இருந்தோம்—அங்கு என்ன வென்று கருதுகிறீர்கள்—ஆச்சாரியார் ராஜினாமாச்செய்வது போல, அவசரச் சட்டம் பிறப்பிப்பது போல, பாதுகாப்புக் கைதியாக ஆக்கப்படுவதைப் போல, பெரியார் கட்டித் தழுவிக் கொள்வது போல, இப்படிப் பலப்பல 'கனவுகள்' —விழித்தபடி—நான் கண்டு கொண்டிருப்பேன். அவர்?—வேலை! வேலை! ஏதாவது செய்தபடி இருப்பார்.

இந்த அருங்குணத்தை நாம் நன்றாகப்பயன்படுத்தி, கழகத்தை மேன்மையுறச் செய்து கொள்ள வேண்டும்,

என்னிடம் சில குறைபாடுகள் உண்டு—குறைபாடுகள் என்று சம்பிரதாய முறையில் சொல்கிறேன்-அதிலே ஒன்று தான் கனவு காண்பது; மற்றொன்று மிகக் கஷ்டமான நெருக்கடியின் போது சர்வ சாதாரணமாகக் கருதிக் கொண்டு சிரித்துக் கிடப்பது. இதிலே எனக்குச் சரியான ஜோடி சம்பத்து தான்! பெரியாரின் 'சர்டிபிகேட்டே' உண்டு இதற்கு.

திருச்சியிலே திரவிடர் கழக மாநில மாநாடு-அதற்காக வேலை செய்வதற்காக ஒரு மாளிகையில் தங்கியிருக்கிறோம், நானும் சம்பத்தும் - பெரியார் வேலை செய்கிறார்—விசாரப்படுகிறார்—தொல்லைப் படுகிறார். நானும் சம்பத்தும் மாடியில் ஏதேதோ பேசுகிறோம், சிரிக்கிறோம், பாடுகிறோம். (யாரும் கேட்கமாட்டார்கள் என்ற தைரியத்தில்) கவலையற்று! பெரியாருக்கும் கோபம் பொங்கி வழிந்தது! எப்படிப்பட்ட சமயம்! இந்த இரண்டு பசங்களும் சிரித்துக் கொண்டு இருக்கிறார்களே! துளியாவது கவலை இருக்கிறதா? ஒரு பெரிய மாநாடு நடக்க வேண்டும், அது பற்றி துளியும் கவலைப்படாமல், தின்பதும், திரிவதும், ஆடுவதும், பாடுவதும், செச்சே! - என்று பேசினார். அப்போது நான் செல்லப் பிள்ளை! இகழப்பட்டபோதும், பழிக்கப்பட்டபோதும், அன்பு காட்ட வேண்டியவர்கள் பகைக்கும்போதும், சிரித்துச் சோகத்தைச் சிதறடிப்பது என் முறை—மிகச் சிறியவனாக இருந்தது முதலே சம்பத்துக்கும் இது முறை 'விளையாட்டுப் பிள்ளைகள்' என்று இதனைக் கொண்டு பெரியார் கூறுவதுண்டு, அதற்கும் நாங்கள் இருவரும் சிரித்தோம். அவரால் சகிக்கவே முடியவில்லை. எனவே டிக்கட் விற்பனை என்ற ஏற்பட்டின்படி, சம்பத்தைக் கருவூருக்கே அனுப்பிவிட்டார்!

சிரிக்கத் தெரியாமலிருந்தால் எனக்கு பொதுவாழ்க்கையிலே ஏற்பட்ட சங்கடங்களால், பைத்தியமே பிடித்துவிட்டிற்கும். விளையாட்டுத்தனமல்ல அது— விசாரத்திலே மூழ்கிக் குழப்பமடைந்து போகாமலிருக்க, அது தகுந்த முறையாக அமைந்திருந்தது.

குறைபாடுகள் என்று இவைகளைக் கருதலாம்—விவரம் கூறப்படா முன்பு.

தோழர் நெடுஞ்செழியனைப் பெரியார், தமது மேற்பார்வையில் வைத்திருந்து பார்த்தார்—அவரால் யார்மீதும் குற்றம் காணமுடியும் ஆனால், தோழர் நெடுஞ்செழியனிடம், அவராலும் ஒரு குறைகூடக் கண்டறிந்து கூற இயலவில்லை. அத்தகைய பனியாளர் நமக்குக் கிடைத்திருக்கிறார்.

அவருக்கு கிடைத்திருக்கும் கழகமோ, சாமான்யமானதல்ல!

ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைகள்! உண்டு. இருமுறை அதற்கான முயற்சி எடுத்து முறிந்து போனது முண்டு இப்போதும் அந்த எண்ணம் இருந்தபடி தான் இருக்கிறது—தக்க வாய்ப்பு ஏற்படவில்லை. தம்பி! நமக்கிருக்கும் குறைபாடுகள் இவை போன்றவையே தவிர, இல்லாததும் பொல்லாததுமாக நம்மைப் பற்றி இடுப்பொடிந்ததுகளும், இஞ்சி தின்றதுகளும், பேசுவதாலும் எழுதுவதாலும் இல்லவே இல்லை என்பதை முதலில் மனதிலே நன்கு பதிய வைத்துக் கொள்ள வேண்டுகிறேன். அந்தக் கட்டத்தைத் தாண்டிவிட்டோம். வீசப்படவேண்டிய பழிச்சொல் அவ்வளவும், எவ்வளவு வேகமாகவும் திறமையுடனும் வீசப்பட வேண்டுமோ அவ்விதம் வீசிப் பார்த்தாகிவிட்டது. இப்போது கிடைப்பதெல்லாம் மறுபதிப்புகள்—எளிய பதிப்புகள்—இலவச வெளியீடுகள்!! இவைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய நிலையில் நாம் இல்லை.

அங்கே வெடிப்பு, இங்கே கொந்தளிப்பு, இங்கே குழப்பம், என்றெல்லாம் எழுதுகிறார்கள். படிக்கும் போது ஆத்திரமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறாய். தம்பி! இதற்கு ஏன் ஆத்திரம், ஆயாசம்? நம்மைப் பற்றிய 'செய்திகள்' பிற கட்சிக் காரர்களும் இதழ்களும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய அளவுக்கு, நாட்டில் முக்கியத்துவம் பெற்றுவிட்டன என்பதுதானே அதன் பொருள். ஆயாசப்படுவதா!! பேதமும் பிளவும், வெடிப்பும் குழப்பமும் ஏற்பட்டால் தான், நமது இயக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்று கிலி கொண்டவர்கள், இப்போது கீறலைக் கண்டு வெடிப்பு என்று கூவிக் களிப்படைகிறார்கள்! இங்கிருந்து செல்பவர்களும், இங்கு இருந்துவிட்டு வந்த

வர்கள் என்ற காரணத்தாலேயே வாழ்த்தும் வரவேற்பும் பெறுகிறார்கள்— இந்த உாசரிப்பும் உலாவும் சில நாட்களுக்கு நடைபெறும். நமது மாஜி நண்பர்கள் என்ற முறையில் அவர்கள் எப்படியோ ஒன்று மகிழ்ச்சி பெறட்டும் என்பதுதான் என் எண்ணம். அவர்களை எத்தனை நாளைக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது தெரியாததா!! இவ்விதம் 'பயணம்' தடத்தியவர் பலர்; அவர்களிலே யார் இன்று, உருவம் தெரியும் நிலையில் இருக்கிறார்கள்? ஆயினும் எனக்கு—உண்மையில் கூறுகிறேன்—நமது இயக்கத்தைவிட்டு யாராவது பிரிந்து செல்கிறார்கள் என்றால், வருத்தந்தான். கூடுமான வரையில் கூடி வாழ்வதைதான் நான் விரும்புகிறேன்—சுவரிலிருந்து சிறு ஆணி பெயர்க்கப்பட்டாலும், ஆபத்து இல்லை என்றாலும், பார்க்க நன்றாக இராது என்று எண்ணுபவன். இந்த நோக்குடனேயே நான் சிலர் வெளியேற எண்ணிம் போதெல்லாம், சமரசத்திற்காக முயன்றிருக்கிறேன்.

திராவிட நாடு தம்பிக்கு
8 - 5 - 55

நாம் பெற்ற தியாகத் தழும்புகளுக்கு முடியுமானால், அவை இடி இடியெனச்சிரித்து, அவர்களைப் பார்த்து ஏளனம் செய்யும்!!

தம்பி, காங்கிரஸிகாரர்கள் தண்டவாளப்பெயர்ப்பு, தபாலாபீஸ் கொளுத்துதல் போன்ற முறையில் ஆகஸ்ட்டுப் போராட்டம் நடத்தினர். 1949 இல்! நாம் கலந்து கொள்ள வில்லை. நாம் என்றால் தம்பி, நானும் நீயும் மட்டுமல்ல—தி.க. தி.மு.க என்றுள்ள இரண்டும் ஒன்றாக இருந்ததே, அந்தக் குடும்பம் பூராவும். நாம் பயந்தாங்கொள்ளிகள், அடக்குமுறைக்குப் பயந்து ஓடிவிட்டோம், என்றா பொருள்! அந்த முறைகள் சரியல்ல என்று மனதார நம்பினோம்—வீணான கலகம் கலவரம் குழப்பம் பொருட்சேதம், இவைதான் மிச்சம் என்று எண்ணினோம். எனவே ஒதுங்கி நின்றோம். அது போலத்தான் இப்போது, கொடி கொளுத்தும் காரியத்தில் தி.மு.க. கலந்து கொள்ள வில்லை—இது கோழைத்தனம் என்று கூறுவது எந்த வகையில் பொருந்தும்.

வேண்டுமானால், தமிழ் நாட்டு அரசியலில் இது வாடிக்கை—ஒருவர் மற்றவருடைய கருத்தை அறியும் அளவுக்குக்கூட பாசம் நேசம் கொள்ளாமல் ஒரு திட்டம் தீட்டிவிட்டு, அதன் காரணமாக அதிலே கலந்து கொள்ள மறுப்பவர்களைக் கோழைகள் என்று ஏசுவது தமிழகத்தின் வாடிக்கை, என்று கொள்ளவேண்டியதுதான்! தங்கள் ஆகஸ்டில் சேராததற்காகக் காங்கிரஸ்காரர்கள் திராவிடரைக்கோழை

கள் என்று ஏசினர்! இப்போது. நடைபெறும் கிளர்ச்சிகளில் கொடி கொளுத்துவதில் மட்டுமல்ல. எந்தப் போராட்டத்திலாயினும் சரி. நாம் சேராமலிருந்தால், கோழைகள் என்று ஏசுகிறார்கள்! இது பொருளுள்ளது என்று கருதமுடியுமா? நீண்ட காலமாக இருந்துவரும் வாடிக்கை—பழக்கம் என்று தான் கொள்ளவேண்டும்.

நமக்கென்று ஒரு அமைப்பு இருக்கிறது. நாம் கூடிக் கலந்து பேசிச் சில பல கிளர்ச்சிகள் நடத்தியுமிருக்கிறோம். இனியும் நடத்துவதற்கான முயற்சி இருந்துவருகிறது. இதை எல்லாம் கவனிக்காமல், அவரவர்கள் துவக்கும் கிளர்ச்சிகளில் நாம் கலந்துகொள்ள வேண்டுமென்று கூறுவதும், கலந்து கொல்லாத போது கண்டிப்பதும், ஏன் என்று யோசித்ததுண்டா தம்பி! நாம், அவ்வளவு அருமையாகப் பணியாற்ற கூடிய பக்குவம், பயிற்சி திறம் படைத்தவர்கள் என்ற எண்ணம், எல்லா முகாமிலும் இருக்கிறது—எனவே எல்லோர் கண்ணும் நம்மீது விழுகிறது என்று பொருள்! 14-8-55

ஆமாம் தம்பி. எவ்வளவு கடுமையான கிளர்ச்சிக்கும் ஈடு கொடுக்கக் கூடியவர்கள் என்பதை மும்முனைப் போர் விட்ள நமக்கு, காங்கிரஸ் வட்டாராம்ஏவும் கண்டனக் கணை பிரமாதமானதாகத் தெரியக் காரணமில்லை. நம்மைப் புரிந்து கொள்ளாததால், காங்கிரஸ் வட்டாரம் கணை விடுகிறது நாம் பிரிந்து விட்டதால் குருபீடம் கணை விடுகிறது பொறுமை, அமைதி, கண்ணியம் எனும் அருங்குணத்தையும் பெறவும்; தூற்றுதலைத் தாங்கிக் கொள்ளும் மனத்திடத்தையும்; நோக்கத்தை மாற்ற முனைவோர் வீசும் நிந்தனையைப் பொருட்படுத்தலாகாது என்ற உள்ளபாங்கையும் நாம் பெற இப்போதும் குருபீடம் அருட்புரிகிறது!! இன்னும் நமக்கென்ன குறை!!

குருபீடத்தில் நாமெல்லாம் குற்றவேல் புரிந்துகொண்டு கேட்டறிந்த உபதேசத்தை மறவாமல், நாம் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்.

என்னைப் பொறுத்த வகையில், தம்பி! நான் அங்கு இருந்த போது கிடைத்த பாடத்தைவிட, அரும்பெரும் பாடத்தை. இப்போது குருபீடத்திலிருந்து பெறுகிறேன் ஏசல் கணைகள் மூலம்-என் உள்ளம், தாங்கும் சக்தியை மிக திறம்பட பெற்று வருகிறது. எனவேதான், என்னால் மாற்றுக் கட்சிக்காரரிடம் மனமாச்சரியம் துளியும் கொள்ளாமல் கொள்கைகளை எடுத்துச் சொல்லும் பக்குவம் நிரம்ப தேவைப்படும் வகையான பணியாற்றும்படி, உன்னைக் கேட்டுக் கொள்ள முடிகிறது; அண்ணனுக்குக் கிடைத்துள்ள மனபாங்கு, தம்பிக்கும் உண்டு என்ற நம்பிக்கையுடன் தான் இவ்விதம் கூறுகிறேன்.

தொடரும்

3 - 7 - 1955 தம்பிக்கு

அண்ணாவின் சொல்லாற்றல்

— டாக்டர் பொற்கோ —

அண்ணா என்றும் அறிஞர் அண்ணா என்றும் பேரறிஞர் அண்ணா என்றும் தமிழக மக்கள் அன்புப் பெருக்கோடு அழைக்கும் அந்தப் பெருமகனார் நம்மை விட்டுப் பிரிந்து இருபத்து நான்கு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

இந்த இருபத்து நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் எத்துணையோ மாற்றங்கள் நடந்து முடிந்து விட்டன. இன்னும் மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வேகமாக வந்து குவிந்து கொண்டிருக்கிற சமுதாய நிகழ்ச்சிகளில் எத்துணையோ நினைவுகள் புதைந்து போய்விட்டன. ஆனால், ஏ தாழ்ந்த தமிழகமே! என்று உரக்கக் குரல் கொடுத்துத் தமிழகத்தையே எழுப்பி விழிப்புணர்வு ஊட்டிய பேரறிஞர் அண்ணாவின் நினைவுகளும் அவரது பரந்த உள்ளத்தில் நிரந்தரத் தலைவராக நிலைத்து நின்ற தந்தை பெரியாரின் நினைவுகளும் மங்கவில்லை. மறையவில்லை. மற்ற நினைவுகளைப் போல புதைந்து போய்விடவில்லை. நேரம் வரும்போதெல்லாம் பொங்கிப்பொங்கி, கனன்றுகனன்று, கிளர்ந்துகிளர்ந்து மேலே எழுந்து வருகிறது. அவர்கள் இருந்தபோது அவர்களை நினைத்ததை விட இல்லாதபோது அதிகமாக நினைக்க வேண்டியிருக்கிறது.

அண்ணா பிறந்த காலத்தில் இருந்த தமிழகம் தொட்டதற்கெல்லாம் அஞ்சி அஞ்சித் துவண்டது; சாதி உயர்வு தாழ்வில் சிக்கித்தவித்தது சமயவாதகங்களிலும் புராண இதிகாசப் போதனைகளிலும் சிந்தனை முடம்பட்டுக் கிடந்து திக்குமுக்காடித் திணறியது. இந்தத்தமிழ் மண்ணில் பலபேர் குட்டக்குட்ட குனித்து குனிந்து நெளிந்தார்கள், சிலபேர் குனிபவரைக் கண்டு குனியக்குனிய குட்டிக்குட்டிக் கொட்டமடித்தார்கள். இந்திய நாடே இங்கிலாந்துக்கு அடிமைப்பட்டுக் கிடந்த நேரத்தில் அந்தச்சாதிக்கு இந்தச் சாதி அடிமை, அவனுக்கு இவன் அடிமை, ஆணுக்குப்பெண் அடிமை என்று இப்படி அடிமைப் பண்பாட்டுக் கேவல நிலை நாடுமுழுவதும் நீக்கமற நிறைந்திருந்தது.

மனிதநேயத் தூண்டுதலால் மனித சமத்துவ நோக்கோடு இந்த இழிநிலையை மூர்க்கமாக எதிர்த்துப் போராட முன்னமே புறப்பட்டு

217215

விட்டார் தந்தை பெரியார். அவரால் ஈர்க்கப்பெற்று அவரால் உரமேற்றப்பெற்று அவரையே தலைவராகவும் அவரையே தமிழ்ச் சமுதாயப் பெரு - பேராசிரியராகவும் ஏற்றுக்கொண்டு பொதுவாழ்வில் புகுந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே நடக்காத விந்தைகளை நடத்திக் காட்டினார்; நிமிராத தலைகளை நிமிர வைத்தார்; விழிக்காத கண்களை விழிக்க வைத்தார்.

தன் இன மேம்பாட்டுக்காக, தன் மொழி உயர்வுக்காக யாரும் பேசத் துணியாத பேச்சுகளைப் பேசினார்; யாரும் எழுதத்துணியாத கருத்துக்களை எழுதினார்.

சமுதாய நலத்துக்காகவும் சாமான்யர் மானத்தைக்காக்கவும் இவர் போர்முரசு கொட்டிப் புறப்பட்டபோது எதிரில் நின்ற எதிரிகள் ஏராளம்; எதிரிகளின் கைவசம் இருந்த பாரம்பரிய மரபுவழி ஆயுதங்களும் ஏராளம் இந்த புதுயுகப் பாரதப்போர்க்களத்தில் பாரதம் கண்டறியாத அபிமன்னனாக அறிஞர் அண்ணா போர் தொடுத்தார். இவரை எதிர்த்தவர் யாரும் வென்றதில்லை. ஏங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் என்ற பாடலுக்குப் பொருள் விளைந்தது. இறுதிக் காலத்தில் பகைவர்கள் எல்லோரும் மறைந்து போனார்கள்.

இலக்கியப் புலவராக, அரசியல் மேதையாக, நடிகராக, கவிஞராக, எழுத்தாளராக, பேச்சாளராக இப்படி எத்துணையோ நிலையில் இவர் தமது எதிரிகளைச் சின்னாபின்னப் படுத்தினார். இவர் பொதுவாழ்வைத் தொடங்கிய காலத்தில் அரசியல், சமுதாயம், கலை. இலக்கியம், சமயம், முதலான பல துறைகளிலிருந்து இவர் தாக்குதலைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

இப்படிப்பட்ட பல முனைத் தாக்குதல்களையும் எதிர்த்து இவர் போராடிய விதமே தனி. எதையும் எதிர்க்கொள்ளும் துணிச்சலோடு எதையும் தாங்கும் இதயத்தோடு, புன்முருவல் குறையாமல், போர்க்குணம் மாறாமல், கண் சிவக்காமல் உதட்டைக் கடிக்காமல், எதிரிகளைச் சபிக்காமல், இளைக்காமல் சளைக்காமல் எதிரிகளோடு இவர் நித்தியபோர் வியக்க தக்க ஒரு வீர விளையாட்டாக இருந்தது. பாராட்டிப் போற்றத் தக்க ஒரு பண்பாடு முன்னோட்டமாக இருந்தது.

இப்படி ஒரு வீர விளையாட்டை நிகழ்த்தித் தமிழகத்தில் வியக்கத் தக்க விளைவுகளைக் காண இவரால் எப்படி முடிந்தது?

அறிஞர் அணணா அவர்கள் சலிக்காத படிப்பாளர். அதனால் அவரிடம் அறிஞர்கள் போற்றத்தக்க அறிவுவளம் இருந்தது. அறிஞர். அண்ணாவின் மனம் கருத்து வேறுபாடுகளுக்காக எங்கும் பகைமை

பாராட்டியதில்லை. அதனால், எதிரிகளும் அவருக்கு நண்பர்களா னார்கள். போற்றுதல் கண்டு மயங்கவில்லை; தூற்றுதல் கண்டும் துவளவில்லை. ஆதனால் எதிரிகளால் அவரை ஏமாற்றவும் முடிய வில்லை; அச்சுறுத்தவும் முடியவில்லை. இவற்றோடு நெகிழாத கொள்கைப் பிடிப்பும் அசையாத குறிக்கோளும் பகுத்தறிவுத் தொலை நோக்கும் இயல்பாகவே அமைந்திருந்தது. அதனால், யாராலும் அவரை வழிமாற்றித் திசைதிருப்ப முடியவில்லை.

இனிமையான இந்தப் பண்புகள் யாவும் துணைநிற்க அவருக்குத் தப்பாமல் பயன்பட்ட போர்படை அவருடைய சொல்லாற்றல்.

சொல்லாற்றல் பெற்ற எல்லோரும் சாதிக்காததை அவர் சாதித் தார். அவரிடமிருந்த அறிவு வளமும் பண்பு நலமும் தலைமைக் குணமும் அவருடைய எழுத்துக்கும் பேச்சுக்கும் எல்லையற்ற ஆற்ற லைக் கொடுத்தன.

சொல்லாற்றல் என்றால் தத்தித் தாதூதுதி தாதூதித் தத்துதி என்றெல்லாம் ஓசை விளையாட்டு விளையாடுவதல்ல. சங்கரற்கு மாறு தலை சண்முகற்கு மாறுதலை என்று பாடுகிற சொல் விளையாட்டும் அல்ல. உரைப்பவன் ஒன்றைச் சொல்ல அந்தச் சொற்கள் கேட்பவர் காதுகளை ஊடுருவி உள்ளே சென்று மனதைத் தொட்டு அங்கே உணர்ச்சி நிலையிலும் அறிவு நிலையிலும் ஒருவித இராசயன மாற் றத்தை உண்டாக்க வேண்டும். அப்படிச் சொல்லை ஆளுகிற ஆற்றல் தான் சொல்லாற்றல். அப்படிப்பட்ட சொல்லாற்றல் தான் அண்ணா விடமிருந்த சொல்லாற்றல்.

அந்தச் சொல்லாற்றல்தான் வரலாற்றை மாற்றியது. எதிரிகளின் நாக்கைப் பிறழவிடாமல் கட்டியது. சொற்போருக்கு வந்தவர்களை இருந்த இடத்தில் இருக்க விடாமல் துரத்தியது. கருத்துக் குருடர்க ளுக்குக் கண்ணொளி தந்தது. மீளாத துயிலில் இருந்த மடியாளர்களை மாவீரர்களாக்கியது. இந்த நாட்டில் வாழும் சாமான்யர்கள் மீது சுமத் தப்பட்ட இழிவுச் சுமையைத் தூக்கி எறிந்தது. சம்பிரதாயம் என்றும் சடங்கு எங்கும் எளியவர் மீது பூட்டப்பட்டிருந்த விலங்குகளையெல் லாம் உடைத்து நொறுக்கும் உரத்தைக் கொடுத்ததெல்லாம் அண்ணா வின் அந்தச்சொல்லாற்றல்தான்.

''விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப்பெறின்''.

''சொலல்வெல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல் லல் யார்க்கும் அரிது.''

என்ற குறள்களைப் பார்க்கும் போதெல்லாம் அண்ணாவின் முகந் தான் மனக்கண்முன் தோன்றுகிறது.

அண்ணாவின் சொல் வெல்லுஞ்சொல்லானதற்கு எத்துணையோ காரணங்கள் இருக்கின்றன. அவர் தன்னையும் தன் புலமை வளத்தையுமே நினைத்துக்கொண்டு பேசாமல், யாருக்காகப் பேசுகிறோம் என்ற உணர்வோடு பேசினார்—எழுதினார். என்ன பேசுகிறோம், எவ்வளவு பேசவேண்டும் என்ற உணர்வோடு பேசினார்.

இடத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப அவர் எழுத்திலும் பேச்சிலும் பழங்கதைகள் பளிச்சிட்டன. புதிய புனைக்கதைகள் முளைத்தன, நகைச்சுவை உறையாடின. உவமையும் உருவகமும் குறிப்புப் பேச்சும் பின்னிப்பிணைந்து மின்னின. சொல்லும் தொடரும் மாலைகளாய், அடுக்குகளாய், வண்ணவண்ணச் சரங்களாய் கேட்போரைக் கவர்ந்து இழுத்தன. கருத்துப் பிழம்புகளும் கற்பனைக் கோலங்களும் கேட்போருக்கு ஒரு புதிய அனுபவத்தையே உண்டாக்கின.

அவர் எழுத்திலும் பேச்சிலும் எத்துணையோ பகுதிகள் கல்வெட்டுகளாக நிலை பெற்று விட்டது. நெஞ்சைவிட்டகலாத நிகழ்ச்சிகளை அவை நிலைநிறுத்திக் வைக்கின்றன.

''(இவர்) என்னைப் புரட்சியின் சிகரம் என்றார். புரட்சி இவ்வளவு குள்ளமாயிராது. புரட்சியின் சிகரம் என்றால் அது இங்கே அமர்ந்திருக்கும் டாக்டர் சிதம்பரநாதன் அவர்களுக்குப் பொருந்தும்'' என்று 1954 இல் பேசி இப்போதும் நம்மை அவர் சிரிக்க செய்கிறார்.

ஆட்சிப் பொறுப்பை எற்றபின் நான் மூன்று முறை மகிழ்ச்சி அடைந்தேன்.

தமிழ் நாடு என்றும் பெயரிடுவதை எல்லாக் கட்சியினரும் ஏற்கச் செய்து ஒருசேர, தமிழ்தமிழ் நாடு வாழ்க என்று முழக்கமிட்ட நேரத்தில் மகிழ்ச்சி அடைந்தேன் அது என்னுடைய 58 ஆண்டு வாழ்வில் நான் கேட்டிராத கீதம், அது பார்த்திராத காட்சி. என் செவியில் விழுந்திராத செந்தேன். இரண்டாவதாக நான் மகிழ்ச்சி அடைந்தது சுயமரியாதைத் திருமணச் சட்டம் நிறைவேறியபோது ஆகும். எங்கே ஒழுக்கம் கெட்டு விடும் என்ற பேச்செல்லாம் எழுமோ என்று அஞ்சிய நான் அந்தச் சட்டம் நிறைவேறியபோது மகிழ்ச்சி அடைந்தேன். மூன்றாவதாக நான் மகிழ்ச்சி அடைந்தது இந்தி இனி இல்லை என்று சொன்னபோது அடைந்த மகிழ்ச்சி ஆகும்.''

பேரறிஞர் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லும் இந்த மூன்று மகிழ்ச்சியிலும் நாம் மிகுந்த நன்றி உணர்ச்சியோடு பங்கு கொள்கிறோம். ஆற்றல் மிகுந்த அந்தப் பெருமகனாரை உரிமையோடும் நன்றி உணர்வோடும் நாம் மீண்டும் மீண்டும் நினைவுகூர வேண்டும். அவர் ஊட்டிய இனிய பண்பாடு உணர்வு போற்றப்பட வேண்டும்; மேலும் மேலும் வளர்க்கப்பட வேண்டும்.

குறிப்பு:- இந்திய வானொலியில் ஒலிபரப்பப் பெற்றது.

அறிஞர் அண்ணாவின் பேத்தி மணவிழா

சென்னை. நவ. 16— பேரறிஞர் அண்ணாவின் பேத்தியும், டாக்டர் சி.என்.ஏ. பரிமளம் அவர்களது புதல்வியுமான செல்வி அ.ப. இளவரசி எம்.பி.இ., - திருப்பூர் எம்.ஏ. முத்து செண்பகனார் அவர்களின் பேரன், திரு. யுவராஜ், எம்.எம். பாலசுப்ரமணியம் அவர்களின் மகன் செல்வன் எம்.எம் முத்துக்குமார் பி.பி.ஏ., ஆகியோரது வாழ்க்கை துணை நல ஒப்பந்த விழா 15.11.93. திங்களன்று சென்னை ராஜா முத்தையா மன்றத்தில் சிறப்புடன் நடைபெற்றது.

மணவிழா நிகழ்ச்சி காலை 9.30 மணிக்குத் துவங்கியது. முதலாவதாக டாக்டர் சி.என்.ஏ. பரிமளம் வரவேற்புரையாற்றினார். மணவிழாவிற்கு, 'முத்தமிழ்காவலர்' கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமை வகித்தார். மணமக்கள் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த உறுதி மொழியினை ஏற்கச்செய்து, மாலைகள் மாற்றிக்கொள்ள வைத்து, மணவிழாவினை முத்தமிழக் காவலர் நடத்தி வைத்தார்.

மணமக்களுக்கு, தமிழக ஆளுநர் மாண்புமிகு டாக்டர் எம். சென்னா ரெட்டி, பரிசுப்பொருள் வழங்கி, மலர்ச்செண்டு கொடுத்து வாழ்த்துத்தெரிவித்தார்.

வெளியூர் சுற்றுப்பயணத்தில் இருக்கும் கழகப்பொதுச் செயலாளர் தமிழினக் காவலர் மாண்புமிகு கி. வீரமணி அவர்கள் மணமக்களை வாழ்த்தி வாழ்த்துச் செய்தி வழங்கியிருந்தார்கள்.

விழாமேடையில் மணமக்களை வாழ்த்தி, நீதிபதி மாண்புமிகு நடராசன், பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் மாரிமுத்து, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.எஸ் மாரிசாமி, உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த ஜனார்தனம், ஜி. உமாபதி, கோவை செழியன், முன்னாள் எம்.பி., புஞ்சை புளியம்பட்டி சாமிநாதன், நடிக கணி டி.வி. நாராயணசாமி இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராசேந்திரன், 'தமிழ் அரசி'' ஆசிரியர் நடராசன், புலவர் புலமைபித்தன், இராம. அரங்கண்ணல், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. பொதுச்செயலாளர், எஸ். திருநாவுக்கரசு திராவிடர் கழக பிரச்சார செயலாளர் சேலம் அருள் தமாழி, நாடாளுமன்ற மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் டி. ஆர். பாலு, முன்னாள் அமைச்சர் நாஞ்சில் மனோகரன், திருவாரூர் தங்கராசு, ஈழவேந்தன், முன்னாள் அமைச்சர் க. இராசாராம், தமிழக

சட்ட அமைச்சர் கே.ஏ. கிருட்டிணசாமி, தமிழ்நாடு இந்திய யூனியன் முஸ்லிம்லீக் தலைவர் ஏ. கே. அப்துல்சமது தமிழக ஜனதாதளத்தைச் சேர்ந்த இரா. செழியன், டாக்டர் மா.பொ. சிவஞானம், தமிழக வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.டி. சோமசுந்தரம், காஞ்சி வெ. சம்பந்தம் சுலோசன சம்பந் த. கிருட்டிணன் M.P. இறுதியாக தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் வாழ்த்துரை வழங்கினார். கள்.

மணவிழா மேடையில், அண்ணாவின் துணைவியார் ராணி அம்மையார் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

தமிழகமுதல்வர் மாண்புமிகு செல்வி. ஜெயலலிதா அவர்கள் சார்பிலும் மணமக்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப் பட்டது. பரிசும் அளிக்கப்பட்டது,

ராஜா முத்தையா செட்டியார் மன்றம் நிரம்பிவழிந்திடும் வண்ணம், மணமக்களை வாழ்த்திட பல்துறை அறிஞர்களும், முக்கிய பிரமுகர்களும் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வருகை தந்திருந்தனர்.

மணவிழா நிகழ்ச்சிகள் முற்பகல் 11.20 மணியளவில் நிறைவுற்றன.

மாலை நடைபெற்ற வரவேற்பு

மாலையில் நடைபெற்ற வரவேற்பில் டாக்டர் கங்கை அமரன் அவர்களின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. டாக்டர், கலைஞர், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வெங்கட்ராமன், டாக்டர் நாவலர். டைரக்டர். கார்வண்ணன், விஜயா தாயன்பன் பேரறிஞர் அண்ணா இலக்கியப்பேரவை அமைப்பாளர்கள் திரு. பெரியய்யா, மதுரை, திரு. அ.கி. மூர்த்தி., திரு. ஆதிமூலம் தஞ்சை, அ. கதிர்வேல், காரைக்குடி, திரு. செந்திலதியன், திரு. முரளி, நெய்வேலி திரு. பல்லடம்மாணிக்கம், திரு. பொன்சொ. தியாகராசன், கவிஞர்பட்டி செங்குட்டுவன் விருத்தாசலம், காஞ்சி துரைஅரசன் திரு. கீ. வீரமணி, திருப்பத்தூர், நாகராசன் சென்னை. பாவலர் முத்துசாமி, பண்ரொட்டி ராமசந்திரன், V.G. சந்தோசம். கவிஞர் பனப்பாக்கம் சீத்தா, மூவேந்தர் முத்து. நடிகர் திலகம் சிவாஜி கனேசன், டைரக்டர் S P முத்துராமன் தமிழ்நாடு அரசு தலைமை செயலர் T V. வெங்கட்ராமன் செ. மாதவன், T T.வாசு, H V. அண்டே, இரா. அன்பரசு. MP. C. சுப்ரமணியம், ராமச்சந்திர ஆதித்தன், அமைச்சர் R M, வீரப்பன் பா. இராமச்சந்திரன். கவிஞர் பூங்கலிங்குன்றன், நம்மாழ்வார், திருச்சி சௌந்தர்ராசன் Ex

MLA., நல்லரசு, இராசரத்தினம் IAS, கிருட்டிணசாமி IAS, T K. பொன்னுவேலு. வேம்பையன் பாவலர் பல்லவன், கண்ணியம் குலோத்துங்கன், பேராசிரியர் K S. மூர்த்தி, TVS மணி, பட்டுக் கோட்டை குமாரவேல், புலவர் இளஞ்செழியன், கவிஞர் மறைமலையான். ராதாகிருட்டிணன் M A. ராஜ்குமார் மண்றாடியார் ஆகியோர் வாழ்த்தினர்.

வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்கள்

திரு. கண்ணப்பன் தி.மு.க. மாவட்ட செயலாளர் கோவை தோப்பூர் திருவேங்கிடம் வேலூர், பாலா பழநூர் சென்னை, சுரேஸ் கிருஷ்ணா சென்னை, N. சண்முகம் திருச்சிராப்பள்ளி, Dr.ஜெய சீலன் மத்தியாஸ் நகர்கோயில், திரு கோ. சி. மணி ஆடுதுறை. திரு. சேம் குடும்பத்தினர் சென்னை, திரு. கௌ அரசன் எத்திராஜ் கல்லூரி மஸ்தான் குடும்பத்தினர் திருநெல்வேலி, வள்ளியப்பன் TNCC வாழி தட்சிணாமூர்த்தி வேலூர், நலங்கிள்ளி M.A. கௌஹாத்தி குகா சங்கர் பெங்களூர் பெருமாள IRAAS பெங்களூர், கே. தனக்கோடி புதுவை, சங்கரன் ஈரோடு, சுப்ராயன் காஞ்சிபுரம், வைத்தியலிங்கம் சென்னை, சாமிநாதன் குன்னூர், ஜெயவரதராசுலு சென்னை, திரு கனக சபை சாரணர் இயக்கம் திரு ராம்மோகன் ராசா ராசபாளையம், திரு சாந்தப்பா மாசு கட்டுப்பாடு துறை Dr. இராதா கிருட்டிணன் ஆளுநர் ரோட்ப்ரி, க.ப. அறவாணன் புதுவை, பாண்டு ரங்கன் திருச்சிராப்பள்ளி, சிதம்பர சுப்பையன் அம்பா சமுத்திரம், வேல் முருகன் சென்னை, கருணை தாசன் மதுரை, சாம்பாசிவனார் மதுரை,சாத்திரி வெங்கட்ராமன் கொழும்பு, சுந்தரம் திருச்சிராபள்ளி, பழநி சாமி BABL அரியலூர் பிரகாஸ் சில்க்ஸ் காஞ்சிபுரம், A D முத்து சாமி சென்னை, C S ஜானகி ராமன் BABL சென்னை, A. வேனு கோபால் காஞ்சிபுரம், திருமதி சௌந்தரம் M.P. DKC, அன்பரசு சென்னை, பாலசுப்ரமணியன் ஆனந்தவிகடன் ஆசிரியர், M. S. சாமி நாதன் சென்னை, மனசை பகீரன் சென்னை, வந்திய தேவன் அமைப்பு செயலர் திராவிடர் கழகம், நீலமேகம் சென்னை பாணடு ரங்கன் அரியலூர் மாவட்ட செயலர், திருவேட்டை T I I C சாரதி நரகூஸ் காபி, நாகராசன் DMS சென்னை, அபுல் அசோகன் MLA மயிலாடுதுறை. தர்மாம்பாள் மயிலாடுதுறை, சரோஜா குப்புசாமி திருச்சிராப்பள்ளி, சாயிராமஸ்தான் சென்னை, செல்வராசன் சென்னை ஒபுல் ரெட்டி சென்னை, பிரகாசு காரியாபட்டி, A பேசசு காரியாபட்டி Dr.க. இளமதி பழநி, ஞானப்பிரகாசம் துணைவேந்தர் வேப்பேரி, திருமதி சரோஜினி வரதப்பன் சென்னை, A.R. ராமசாமி Ex. MLA முசிரி, A. பால்ராஜ் IAS, பாலகங்காதரன் உடுமலைப்பேட்டை, நடராசன் சேலம், K. S. நாராயணன் சென்னை,

Dr இராமகிருட்டிணன் சென்னை, பிரேமையதாஸ் சென்னை, கும்பகோணம் S· ராகவன் சென்னை, முத்துச் செல்வம், திரு. வாழப்பாடி இராமமூர்த்தி, திரு. வைத்தியலிங்கம் முதல்வர், புதுவை, திரு. சிவந்திஆதித்தன், டாக்டர் சுந்தரராசன் MLAபரமக்குடி, ஆர். சௌந்தர்ராச, மூப்பனரர் தஞ்சாவூர், ரத்தினம் மதுரை, மணிமொழியன் கலேஜ் அவுஸ் மதுரை, தம்பிதுரை, Dr. சரோசாMLA, T ராமசந்திரன் முன்னாள் முதல்வர் புதுவை, நீலநாராயணன் சென்னை, கண்ணப்பன் பொதுப்பணிதுறை அமைச்சர் சென்னை. சே சாதிக் துணைவேந்தர் சென்னை பல்கலைகழகம். தவத்திரு குன்றகுடி அடிகளார் VC குழந்தைசாமி துணைவேந்தர் MAM இராமசாமி சென்னை, பாலகிருட்டினன் BE. திருப்பனந்தாள் மு. வயலூர்குமரன் திருநெல்வேலி மா சீனிவாசன் சென்னை தில்லை வில்லாளன் சிதம்பரம். FV அருள் சென்னை, மணி வமூவூர் ராமசந்திரன் சிதம்பரம், மேசி தூய்மணி மேட்டுப்பாளையம்G. குமார் மயிலாடுதுறை, விஜயகாந்த் சென்னை, விநாயகசுந்தரம் பெங்களூர், நாகராசன் சென்னை, அனுமந்து பெங்களூர், விஜயலட்சுமி தனக்கோடி பெங்களூர், மீனாட்சி சுந்தரம் மயிலாடுதுறை, புலவர் முருகேசன் வேங்கூர். JS ராசு MP செந்தில் வடிவு சென்னை, மயில்சாமி IAS. கோவிந்தராசன் விழுப்புரம் நீதிபதி கோகுல கிருட்டிணன் குசராத், Dr. DK தர்மலிங்கம் சென்னை, SAG ராமி திருச்சிராப்பள்ளி, CVR அருணாசலம் புதுவை AV. செட்டியார் சென்னை, அனந்த கிருட்டிணன் துணைவேந்தர் அண்ணா பல்கலை கழகம், இளமுருகு பொற் செல்வி குழித்தலை, காண் டீபன் சேலம், K.S. வெங்கு மயிலாடுதுறை, இந்திய குடியரசு தலைவர், துணைத்தலைவர், பிரதமர் அருண் கோயங் மத்திய அமைச்சர், பாலராம் பகத் மத்திய அமைச்சர், சிவராஜ் பாட்டீல் மேலவைத் தலைவர் தில்லி, விஜய பாஸ்கார் ரெட்டி முதல்வர் ஆந்திரம், A.K. அந்தோனி மத்திய அமைச்சர், K.A. தங்கவேலு மத்திய அமைச்சர், ராச்சய்யா ஆளுநர் கேரளா, சாதிக் அலி தில்லி ரகுநாத ரெட்டி, B.D. ஜாட்டி பெங்களூர் சஞ்சீவி ரெட்டி பெங்களூர், நந்தினி சத்பதி ஒரிசா வீரப்பமொய்லி முதல்வர் கர்நாடகம், S.M. கிருட்டினர் துணைமுதல்வர் கர்நாடகம், மன்மோகன் சிங் மத்திய அமைச்சர், தினேஷ் சிங் ஜி. பார்த்தசாரதி, கீ. வாஜ்பாய் டத்தோ K.R. சோம சுந்தரம் மலேசியா, டத்தோ சுப்பிரமணியம்மலேசியா,Dr. நாராயணன் சேலம், டாக்டர் ராசா சந்திரசேகர் திருச்சி, டாக்டர் சுந்தர மோகன் திண்டுக்கல், டாக்டர் பீமராசா ராசபாளையம். டாக்டர் ராசவேலு கடலூர், டாக்டர் S V. உமாபதி சென்னை, டாக்டர்பாலகிருட்டினன் திருச்செங்கோடு, டாக்டர் ஜெயக் குமார் சேத்துப்பட்டு, டாக்டர் சதானந்த ஆச்சாரி தருமபுரி. டாக்டர் V. இராமகிருட்டினன் பெங்களூர், லலிதா காமேஸ்வரன் சென்னை, பக்தா பாரீஸ்—பிரான்சு

திரு. பொன்சொக்கலிங்கம் Ex.MLA, திரு. M.S. இராமசந்திரன், திரு. மேயர் சம்பந்தம், திரு. பொன் முத்துராமலிங்கம், திரு. கணபதி இராம சுப்பையா. BABL. திரு. இரா. ஜனார்த்தனம் ஆகியோர் திருமண விழவிற்கு வந்தவர்களை வரவேற்றார்கள்.

திரு. க. இராசஇராம் அவர்கள் கடந்த ஒரு திங்களாக, முன்னின்று திருமண ஏற்பாடுகளை செய்தார். அறிஞர் அண்ணா அவர்கள் இல்லாத குறையை ஓரளவுக்கு தீர்க்கின்ற வகையில் அண்ணாவின் பாசமிகு தம்பிகள் கட்சி வேறுபாடு இன்றி வந்து கலந்து கொண்டு வாழ்த்தினர்.

திருப்பூரில்

அண்ணா பேத்தி திருமண வரவேற்பு!

அண்ணாவின் பேத்தியும், டாக்டர் பரிமளத்தின் மகளுமான இளவரசிக்கும் திருப்பூர் எம். ஏ. முத்து செண்பகனார் பேரனும், யுவராஜ் எம். எம். பாலசுப்ரமணியத்தின் மகனுமான முத்துக்குமாருக்கும் கடந்த 15-ந்தேதியன்று சென்னையில் திருமணம நடந்தது. கி. ஆ பெ. விசுவநாதம் தலைமை தாங்கி திருமணத்தை நடத்திவைத்தார். கவர்னர் சென்னரெட்டி, மந்திரிகள் எஸ். டி. சோமசுந்தரம், கே. ஏ. கிருஷ்ணசாமி, தி.மு.க. பொசெயலாளர் அன்பழகன், அண்ணாவின் மனைவி ராணிஅம்மாள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டு பணமக்களை வாழ்த்தினர்.

மணமக்களுக்கு ஞாயிறு மாலை 6 மணிக்கு திருமண வரவேற்பு நிகழ்ச்சி திருப்பூரில் உள்ள லட்சுமி திருமணமண்டபத்தில் நடந்தது.

மணமக்களை சபாநாயகர் சேடபட்டிமுத்தையா, சி,கே. குப்புசாமி எம்.பி., திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி, பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் புளியம்பட்டி சாமிநாதன். திருப்பூர் நகர தி.மு.க. செயலாளர் செல்வராஜ், முன்னாள் நகர தி.மு.க. செயலாளர் வே. சுப்பிரமணியம், ப கோபால், முன்னாள் ஊராட்சி ஒன்றிய தலைவர் கிருஷ்ணன்.

திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத்தலைவர் சக்திவேல், தென்

இந்திய பனியன் தயாரிப்பாளர் சங்கத்தலைவர் மோகன் கந்தசாமி, கிரிஸ்டல் ஜெயபால், பைன் நிட்டிங் ஜெகநாதன், ஆர்.ஏ.நிட்டிங் செல்வம், ஜெயபால், பேப்ரிகேஷன் சங்கத்தலைவர் அகில்ரத்தினம், டி.ஜெ.கே.தனபால், பிரேம்துரை.

கோவை கூடுதல் கலெக்டர் பரம்ஜித்சிங்சித்து, தர்மபுரி மாவட்ட போலீஸ் சூப்பிரெண்டு விசுவநாதன், திருப்பூர் துணை சூப்பிரெண்டு சிங்காரம், நடிகர் பாண்டியராஜன், படதயாரிப்பாளர் ராஜகோபால், டையிங்சங்க செயலாளர் எஸ்.எஸ். சாமியப்பன், பனியன் சங்கசெயலாளர் முருகேசன், முத்துக்குமாரசாமி, இன்ஸ்பெக்டர்கள் சந்திரமோகன்பாபு, பஷீர்அகமது, தங்கமுத்து, சப்இன்ஸ்பெக்டர் ராமசாமி மற்றும் டாக்டர்கள், வழக்கறிஞர்கள், திரையரங்கு உரிமையாளர்கள், தொழில் அதிபர்கள் அரசியல் கட்சியினர் வாழ்த்தினார்கள்.

மணவிழாவிற்கு வந்தவர்களை மணமகனின் பெற்றோர் எம்.எஸ்.பாலசுப்ரமணியம்- எம்.கண்ணம்மாள், சகோதரர்கள் யுவராஜ்மனோகர், யுவராஜ்சம்பத், யுவராஜ்செல்வம், யுவராஜ் இளங்கோ ஆகியோர் வரவேற்றனர்.

இதையொட்டி அண்ணா இசைக்குழுவினரின் இசைநிகழ்ச்சி நடந்தது.

அண்ணாவின் மேடைத் தமிழ்

அ.கி. மூர்த்தி

6. அண்ணா கூறும் செய்தியும் அண்ணாவின் ஆய்வாளர்களும்

செய்தி

அண்ணா தம் அவையோருக்குக் கூறும் செய்தி அவர்தம் பேச்சுகளின் நோக்கத்தோடு தொடர்புடையது. வீழ்ச்சியுற்ற தமிழ்ச் சமுதாயம் எழுச்சி பெற வேண்டும் என்பதே அண்ணாவின் பேராவா. அதாவது, நம் பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் உரிய கருத்துகளை நாம் வாழ்வில் கடைபிடிக்க வேண்டும் என்பதே அச்செய்தி. இத்தமிழ்ச் செய்தியையே அண்ணா தம்செய்தியாக அவையோ தெடுத் தெரிவிக்கின்றார் அண்ணா மலைப் பல் கழகப் பட்ட மளிப்பு விழாப்பய உரையில் அவர் இதனைத் தெளிவாகக் கூறுகின்றார்.

"இன்னுஞ் சில ஆண்டுகள் அவர் (சர். ஆர். கே. சண்முகம்) வாழ்ந்திருப்பாரமரயானால் தமிழ் இலக்கியங்களின் செய்தியினைச் சுமந்த வண்ணம் உலகின் பல வீடுகளுக்கும் சென்றிடும் பார், கடந்த பெருங்காலத்தை பற்றிப் பேசப்பட்ட செய்திதான் என்ன?

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
திருமந்திரம், (2066)

யாதும் ஊரே யாவரும் கேளிர்
புறம் (192)

வினையே ஆடவருக்கு உயிரே,
—குறுந்தொகை (135)

நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்பு மின்:
—புறம் (195)

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி இல்லை; வாழியலெனே
—புறம் (187)

செல்வத்துப் பயனே ஈதல்
—புறம் (187)

தீதும் என்றும் பிறந்தர வாரா
—புறம்(192)

பகுத்துண்டு பல்லுயிர் நம்புதல் நாலோர்
தொடுத்தவற்றுள் எல்லாந் தலை
—குறள் (322)

இப்பாடல்களில் அமைந்துள்ள கருத்துகள் இப்பொழுது உலகின்முன் இக்காலத்தின் மலர்கள் என வைக்கப்பட்டுகின்றன."

ஆய்வாளர்கள்

அண்ணாவின் அறிவாண்மையை இதுவரைஐந்து பேராசிரியர்கள் தம் ஆராய்ச்சிக்குப் பொருளாக எடுத்துக் கொண்டு நன்கு ஆராய்ந்துள்ளனர். முனைவர் பட்டமும் பெற்றுள்ளனர். அவை பின் வருமாறு.

1. அண்ணா நாடகங்கள் ஓர் ஆராய்ச்சி முனைவர் ஜனார்த்தனம். இதுவே முதல் ஆராய்ச்சி நூல்.

2. அண்ணாவின் கதை இலக்கியம் — முனைவர் இரா. சேது. அண்ணா புதினங்கள் சிறுகதைகள் பற்றிய மதிப் பீடு.

3. அண்ணாயியம் — முனைவர் கு. விவேகாநந்தன். அண்ணாவின் மடல்கள் பற்றிய ஆராய்ச்சி. இவை மூன்றும் தமிழால் எழுதப் பெற்றது.

4. C. N. Annadurai - A A Study in politics and Administration Dr. L. Thiagaragan (1983)

5. Anna and Burk - A Study incontrest : Dr. S Gopalsamy (1991) இறுதியாக வெளிவந்துள்ள ஆராய்ச்சி உரை இதுவே.

அடுத்த இதழில் இறுதிக் கட்டுரை அண்ணாவின் பேச்சுக்கள் எழுத்துக்கள் பற்றிய வெளியீடுகள்.

JL N92/CW

பகுத்தறிவாளர் கழகம்

(மாநிலப் பகுத்தறிவாளர் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

RATIONALISTS' FORUM

(Affiliated to State Rationalists' Forum, Madras)

அணுவாற்றல் நகரியம், கல்பாக்கம்-603 102.

திருவள்ளுவர் ஆண்டு 2024
நாள் : ஆவனி 27 / 12·9·1993.

பெறுநர்:
மாண்புமிகு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள்.
அமைச்சர், எழுது பொருள் அச்சுத்துறை, தமிழ்நாடு அரசு
தலைமைச் — செயலகம் சென்னை 600 009

நற்றமிழ் நலம் போற்றும் நல்லமைச்சரே நனி வணக்கம்.

தமிழ் மாதின் இனிய உயர் நிலையாக விளங்குகின்ற திருக்குறள் பரப்புதல், திருவள்ளுவர் ஆண்டு முறையைக் குடும்பம், குமுகாயம் (சமுதாயம்), நாடு, அரசு ஆகியவற்றின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பின்பற்றுதல் ஆகியவை தமிழ்நாடு அரசின் குறிக்கோள் ஆகும்.

இவற்றைப் பரப்புவதை வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு தமிழர் திருநாள் தோறும் ஆயிரக்கணக்கில் துண்டறிக்கை அட்டை வடிவில் அச்சிட்டு அஞ்சல் மூலமும் நேரிலும் வழங்கி வருகின்றேன்.

திங்கள் காட்டி (Monthly Sheet Calendar) நாட் குறிப்பு (Diary), அரசிதழ் (Gazette), பணிப்பதிவேடு (Service Register) ஆகியவற்றில் செய்ய வேண்டிய மாற்றங்கள், திருத்தங்கள் பற்றி ஆண்டு தோறும் ஆகஸ்ட் மாதத்தில் தமிழ்நாடு அரசுக்குத் தெரிவித்து வருகின்றேன்.

நமிழ்நாடு அரசு அவற்றை ஏற்று நடை முறைப்படுத்தி வருகிறது. அதற்காக அரசுக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டை, வாழ்த்தை, நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1. திங்கள் காட்டி (Monthly Sheet Calender) :-

1993-ஆம் ஆண்டு திங்கள் காட்டியில் உள்ளதை அப்படியே 1994 - ஆம் ஆண்டு திங்கள் காட்டியிலும் பின்பற்ற வேண்டுகிறேன் கீழ்க் குறிப்பிட்டவை தவிர.

60 ஆண்டுக்குமேல் உள்ள ஆண்டைக் கணக்கிடுவதற்கு உதவி யாக இலலாத 60 ஆண்டுப் பெயர்களை 12 மாதத் தாள்களிலும் அகற்றல் அறிவியல் அணுகு முறையை ஆதிரிப்பதற்குச் சான்றாக அமையும்.

2. நாட்குறிப்பு (Diary)

கீழ்க் குறிப்பிட்ட மாற்றம் தவிர 1993-ஆம் ஆண்டு நாட்குறிப்பில் உள்ளதை அப்படியே 1994 ஆம் ஆண்டு நாட்குறிப்பில் பின்பற்ற வேண்டுகிறேன்.

60 ஆண்டு முறையில் உள்ள பெயர்கள் காலத்தைக் கணக்கிடுவ தற்குப் பயன் படாமையால் அவற்றை நீக்கல் தமிழர்கள் அறிவையும், அறிவியலையும் ஆராய்ச்சியையும் மதித்துப் போற்றுபவர்கள் என்ப தற்குச் சான்றாகும்.

முகப்பு அட்டை முகப்பு அட்டைக்கு அடுத்த தாள்:

இருப்பது.	இருக்க வேண்டியது
1993	1994
நாட்குறிப்பு	திருவள்ளுவர் ஆண்டு 2025 நாட்குறிப்பு

3. அரசிதழ் (Gazet te)

தமிழ்நாடு அரசிதழில் Thiruvalluvar Aandu என்று அச்சிடப்படுகி றது. அதை Thiruvalluvar Year என்று மாற்றல் நல்லது. அதாவது Aandu என்பதை Year என்று மாற்றக் கோருகிறேன். TAMIL ARASU ஆங்கில இதழில் Thiruvalluvar Year என்றுதான் அச்சிடப்படுகிறது.

தமிழ் தெரியாதவர்கள் Aandu என்பதைத் தவறாக உச்சரிக்க நேர்கிறது. Aandu என்பதற்குப் பிறகு உள்ள — குறி நீக்கப் பெறல் வேண்டும். இல்லையென்றால் 2024 (Minus 2024) என்று பொருள்பட ஏதுவாகிறது,

4. பணிப்பதிவேடு (Service Register)

பணிப்பதிவேட்டில் கீழ்க்குறிப்பிட்டவாறு மாற்றம் செய்தல் வேண்டும்.

Date of Birth by Christian Era and wherever possible also in Thiruvalluvar Year (both in figures and words).

பிறந்த நாள் கிறித்தவ ஆண்டில் மற்றும்
இயன்ற வரை திருவள்ளுவர் ஆண்டில்
எண் - எழுத்து இரண்டிலும்).

மேற்குறிப்பிட்டவாறு ஆங்கிலம் இந்தியில் அச்சிட்ட பணிப்பதி வேடுகளை இந்திய அரசு பயன் படுத்தி வருகிறது.

பணிப்பதிவேடு அச்சிடும்போது இந்த மாற்றம் நடைமுறைக்கு வரத் தேவையான முயற்சி மேற்கொள்ள வேண்டுகிறேன்.

5. திருவள்ளுவர் ஆண்டு சுருக்கமாக எழுதும் வழி

தமிழ் ஆண்டாகிய திருவள்ளுவர் ஆண்டு முறையைச் சுருக்கமாக எழுதும் வழக்கமும் நடைமுறைக்கு வருதல் நல்லது.

1993 செப்டம்பர் 12/2024 ஆவணி 27; செப்டம்பர் 12, 1993/

ஆவணி 27. 2024; 12.9.1993/27 ஆவணி 2024 என்று சுருக்கமாக எழுதலாம் / அச்சிடலாம்.

தி. வ. ஆண்டு 2024 ஆவணி 27/12.9.93 என்றும் எழுதலாம். இதை கலைக்கதிர் பின்பற்றுகிறது, மனம் இருப்பின் இடம் உண்டு.

இந்த முறையை இந்திய அரசு அதனுடைய ஆரசிதழிலும் அன்றாட அலுவல்களிலும் பின்பற்றிவருகிறது.

6. தமிழ் நாள்காட்டிக்குழு (Tamil calendar committee)

தமிழ் மாதங்களின் நாள்கள் ஆங்கில மாதங்களின் நாள் போல் வரையறை செய்யப்படவில்லை. ஆண்டு 365 நாள்கள். நாள் மிகை ஆண்டுக்கு (Leap Year) 366 நாள்கள் ஆங்கில ஆண்டு போல் வருகின்றன. தமிழ் நாள்காட்டிக்குழு அமைத்து தமிழ் மாதங்களின் நாள்கள் வரையறை செய்யப்படல் வேண்டும்.

7. 60 ஆண்டு பற்சக்கர முறை

'பிரபவ' முதல் 'அட்சய' வரை உள்ள அறுபது ஆண்டுகளின் பெயர்கள் தமிழ் இல்லை. 60 ஆண்டுகள் பற்சக்கர முறையில் இருப்பதால் 60 ஆண்டுக்குமேல் உளள காலத்தை கணக்கிடுவதற்கு உதவியாக இல்லை. அதற்கு வழங்கும் கதையோ அறிவுக்கும் அறிவியலுக்கும் பொருத்தமாக இல்லை.

60 ஆண்டு பற்சக்கர முறையில் உள்ள பெயர்களில் அச்சிடப்பட்டிருப்பதால் ஏறத்தாழ எழுபது நூல்கள் எந்த ஆண்டில் அச்சிடப்பட்டன என்று கண்டுபிடிக்க முடியாமல் எனது விட்டு நூலகத்தில் இருக்கின்றன என்று தமிழகப் புலவர் குழு அமைப்பாளர் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் கூறுகிறார்.

டென்மார்க் அரசர்' தஞ்சை ஸ்ரீஇரகுநாத நாயக்கர் இருவருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையில் ரௌத்திரி ஆண்டு சித்திரை மாதம் 22-ம்

தேதி என்று உள்ளது. எந்த ரௌத்திரி? உடன்படிக்கை ஏற்பட்டு இன்று எத்தனை ஆண்டுகள் ஆகின்றன? கண்டு பிடிக்க முடிகிறதா?

திருவள்ளுவர் சிலை சென்னையில் பராபவ வருடம் வைகாசி மாதம் 20 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது. சிலை திறந்து இன்று எத்தனை ஆண்டுகள் ஆகின்றன? சொல்ல முடிகின்றதா?

குடி அரசு (வாரப்பதிப்பு).

குரோதன வருஷம் சித்திரை மாதம் 28 ஞாயிற்றுக் கிழமை. இது எந்த ஆண்டு? எத்தனை ஆண்டு என்று கணக்கிட முடிகின்றதா?

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறுபதம் என்பது போல சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளேன்.

பயனில சொல்லாமை என்று ஓர் அதிகாரத்தை அமைத்து நமக்கு வழி காட்டி உள்ளார் வாழ்வியல் நூலை வழங்கிய வான்புகழ் வள்ளுவர். பயனில சொல்லக் கூடாது. என்கிறபோது பயனில்லாதவற்றைப் பின்பற்றவும் கூடாது என்பது தெளிவாகிறது.

''புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தோர்க்கு எழுமையும் இல்''

என்பது வள்ளுவர் வாய்மொழி.

திருவள்ளுவர் சொன்னால் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு. அப்பீல் இல்லை என்று அறிவுக்கடல் அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் கூறுகிறார்.

எனவே, எவ்விதத்திலும் பயன் இல்லாத 60 ஆண்டுப் பெயர்களை நீக்குவதற்கு ஆணை செய்யப் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

இதைச் செய்வதற்கு நிதி தேவை இல்லை. தமிழ் நெஞ்சம் தேவை. அறிவியல் நோக்குத் தேவை. இவை தங்களிடம் நிரம்ப உண்டு.

அச்சிட்ட தமிழ் ஆண்டு அட்டை ஒன்று இத்துடன் இணைத்துள்ளேன்.

இறுதியாக ஓர் அன்பு வேண்டுகோள். எழுதிய எனது பெயர் மறந்து தமிழை நினைந்து முயற்சி செய்யத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நனி நன்றி,

தங்கள் அன்புள்ள,
(வ. வேம்பையன்).

புரட்சி

— அறிஞர் அண்ணா

புரட்சி என்பது இயக்கும் சக்தி! அதைப் பொசுக்கிவிட யாராலும் ஆகாது. புரட்சி என்பது மக்களின் போராடும் சக்தியின் வழி வருவது. புரட்சி வாலிபத்தின் கூறு; பகுத்தறிவாளர் ஆயுதம். பழமை விரும்பிகள், புரட்டர்கள். எதேச் சாதிகாரிகள், சர்வதிகாரிகள் ஆகியோருக்கு நஞ்சு. எனவே தான், அத்தகையோர் புரட்சி என்ற சொல்லைக் கேட்டதும் மருட்சி அடைந்தே விடுவர். நீண்டு வளர்ந்து நிற்கும் நெடு மரங்களும் அசைந்து. ஆடி சுழன்று, அடி அறுபட்டு, விழுந்து நொறுங்கும், சூறாவளி வரின். அதைப் போன்றே ராணுவம், பொக்கிஷம், கர்வம், கபடம். ஆணவம், அகந்தை ஆகிய எந்த ஆயுதங்களையும் ஒருங்கே படைத்துத் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என இறுமாந்து கிடந்த எத்தனையோ எதேச் சாதிகாரிகள் இடர்ப்பட்டு, இடிபட்டு கீழே உருண்டனர் புரட்சியின் வேகத்தைத்தாங்க மாட்டாது எனவேதான் அவர் வழி வந்தவருக்கெல்லாம் புரட்சி என்றதும் மருட்சி ஏற்பட்டு விடுகிறது. மருட்சி அவர்களை காப்பாற்றாது மருட்சி கொண்டோன், பலப்பல கொடுமையான காரியங்களையும் கூசாதுசெய்வான். எனினும், எச்செயலும் புரட்சிப் புயலில் அவனைச் சிக்க வைக்காது போகாது. இது சரித்திரம்.

எதேச்சாதிகாரிகளுக்கு அரசியல் அதிகாரம் கிடைத்தால் அதனை வைத்துக் கொண்டு, சட்டம் கொண்டு புரட்சியை ஒடுக்கப் பார்ப்பர். ராணுவ பலமிருப் பின் புரட்சிக்காரரை சுட்டுக் கொல்லுவர்,

சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுப் பல புதிய கருத்துக்களை புகுத்திப் புரட்சியைக் கிளப்பிய போது, மருண்டவர் எத்தனை பேர்! மருட்சியின் காரணமாக அவர்கள் ஆடிய ஆட்டமும், போட்ட கூக்குரலும், கையாண்ட இழிவான முறைகளும் கொஞ்சமா!

அதைப் போன்றே ''தமிழ் நாடு தமிழருக்கே'' என்ற புரட்சிக் கீதம் பாடப்பட்டவுடன், யாராருக்கு மருட்சி ஏற்பட்டது! மருட்சி காரணமாக, கோமாளித்தனமே குறை தீர்க்கும் மருந்தெனக் கருதும் ஆசாமி முதற்கொண்டு, கோபக்கனலால் எதிர்ப்போரைத் தகித்து விடலாம் எனக் கருதிய காங்கிரஸ் மந்திரிகள் வரையிலே, என்னென்ன பேசினார்கள்! புரட்சி, அவ்விதமாக வெல்லலாம், அவர்கள் மனதை மருட்டி விட்டது.

—இலட்சிய வரலாறு

217215

இந்திய ஒருமைப்பாடு

— தமிழப்பன்

எத்தனை கொடிகள்
எத்தனை கட்சி
எத்தனை பிரிவு இந்நாட்டில்
பக்கத்து வீட்டைப் பகையாய் என்றும்
பண்பை மாற்றாமல் (எத்தனை)
எல்லாம் தனக்கே வேண்டு மென்ற
இயல்பை மாற்றாமல் (எத்தனை)
உயர்வு தாழ்வை மொழிகளுக்குள்ளே
ஒழிக்க நினைக்காமல் (எத்தனை)
கல்விக் கண்ணைத் திறந்து வைக்கும்
கருத்தே இல்லாமல் (எத்தனை)
தாய்மொழி தன்னில் கல்வி கற்கும்
தன்மை வளர்க்காமல் (எத்தனை)
கலப்படம் தன்னை ஒழித்துக் கட்டும்
காரியம் செய்யாமல் (எத்தனை)
சுரண்டிப் பிழைக்கும் செல்வர் தம்மைத்
தூக்கில் மாட்டாமல் (எத்தனை)
ஆளைப் பார்த்து நீதி சொல்லும்
அழுக்கை மாற்றாமல் (எத்தனை)
நல்ல வழியில் பொருளைச் சேர்க்கும்
நடப்பே இல்லாமல் (எத்தனை)
வளருந் தீய வன்முறைப்பேயின்
வாலை நறுக்காமல் (எத்தனை)

தெளிவு - துணிவு - கனிவு

...நான் தம்பி முன்னது இரண்டினைக்கூட வேண்டுமளவு பெற்றிடவில்லை என்று கூறிடலாம். ஆனால் கனிவு என்பதை நான் போதுமான அளவுக்குப் பெற்றிருக்கிறேன் மேலும் பெற விரும்புகிறேன்.

என்னை ஊக்குவிப்பதும், பொதுவாழ்விலே எனக்கு உவகை ஏற்படுத்துவதும் அந்தக் கனிவு எனக்குக் கை கொடுத்து உதவுவதால் தான்!......

10—4—60
—அறிஞர் அண்ணா

நன்கொடை ரூ 3-00 பதிவு எண்: G6/TN/MS(C)1239

காஞ்சி

நாடு

மணமக்களுக்கு வாழ்த்து

திரு. வை. கோபால்சாமி MP, திரு. மதுராந்தகம் ஆறுமுகம், திரு. மீனாட்சி சுந்தரம், தஞ்சை, திரு. கணேச மூர்த்தி பெரியார்மாவட்டம், திரு. கண்ணப்பன், கோவைமாவட்டம், திருச்சி செல்வராசு, ஆகியோர் கடந்த 2.12.93 அன்று நுங்கம்பாக்கம் அறிஞர் அண்ணா வீட்டிற்கு வந்து மணமக்கள் இளவரசி — முத்துக்குமார் ஆகியோரை வாழ்த்தினர். திரு. வை. கோ அவர்கள், மணமகனுக்கும் மணமகளுக்கும் பரிசுகள் அளித்தார்.

சென்ற இதழ்......

சென்ற திங்கள் இதழ் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளி வரவில்லை.

—ஆசிரியர்

ஆசிரியர், வெளியிடுபவர் : மலர்வண்ணன் அண்ணாதுரை
7, அவின்யூ சாலை, சென்னை-34.
அச்சிடுபவர்: C. R. கண்ணன், அண்ணன் அச்சகம், சென்னை-24.

பெறுநர் :
திரு / திருமதி
Director,
Tamilnadu Archives,
MS-8

விடுநர் :
பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை
7. அவின்யு சாலை,
சென்னை-600 034.
பேசி: 8278570